## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிலையத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது

கணக்கீடு செய்தல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

----------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிலையத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணகளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை

தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ''சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007 முதல் 2011 வரை காலத்தின் போது மீட்கப்பட்ட பிணைமுறிகளின் பெறுமதி மற்றும் வங்கியிலிருந்து பெறப்பட்ட வட்டி உட்பட ரூபா 7,011,595 அரசின் திரண்ட நிதிக்கு சொந்தமான வருவாயாகக் கருதப்பட்டு திறைசேரிக்கு மீண்டும் பெறப்பட்டது. இத்தொகையில் கடந்த வருடங்களில் திரண்ட நிதியில் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 6,676,014 தொகை மீண்டும் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னோக்கி சீராக்கம் செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டுக்கான செலவாக வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. எனவே, நிதிக்கூற்றுக்களில் இருந்ததை விட மீளாய்வாண்டில் பற்றாக்குறை அதிகமாக காண்பிக்கப்பட்டது. | தொடர்புடைய பிணைமுறிகளின் வருமானம் உரிய வருடங்களில் கணக்கு வைக்கப்பட்டதன் பின்னர் முதலில் தற்காலிகமாக அழைக்கப்பட்ட வைப்புத்தொகைகளில் பின்னர் State Institute Surplus Fund இல் செய்யப்படும் தற்காலிக வைப்புத்தொகையாகும். நடப்பாண்டிற்கான கணக்குகள், அரசு திரண்ட நிதியத்திற்கு சுவீகரிக்கப்பட்ட பின்னர் NERDC இன் வைப்பு இழப்பின் நட்டத்தை பதிவழிப்பது ஆகும். கணக்கீட்டு கொள்கைகளின் அடிப்படையில் சொத்துக்களின் இழப்பாக அங்கீகரிக்கப்பட்டமையால் இது கடந்தகால (Previous Year) சரிசெய்தலாக கருதப்படுவதில்லை. அதற்குரிய நியம இலக்கம் 3 இன் 54 ஆம் பிரிவின் பிரகாரம் மேலும் வெளிப்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் சமர்ப்பிக்கப்படும். | கடந்த ஆண்டுகளின் நிலுவைகளை கடந்த காலத்துடன் சீராக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்காக பெறப்பட்ட திறைசேரி மூலதன மானியங்களிலிருந்து பயன்படுத்தப்படாத ரூபா 33,867,115 மற்றும் 02 ஆண்டுகளுக்கு மேலாக | மீளாய்வாண்டின் போது மேற்கூறிய பயன்படுத்தப்படாத நிதி எமக்கு கிடைத்தது 2020 திசெம்பர் 30 ஆந் திகதி ஆவதுடன், இவை அனைத்தும் அந்த நேரத்தில் உறுதியான | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப வெளிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்படாத ரூபா 43,612,678 நிதி நிலைமைக் கூற்றில் பொது திறைசேறியின் மூலதனப் பங்களிப்பில் சேர்க்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் படி நிறுவனத்தினால் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நோக்கங்களுக்காக (Committed) இருந்தன. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் இருந்த தேறிய தொகையான ரூ.43,612,678, கணக்கு முறைமையில் ஏற்பட்ட சிக்கலால் உருவானது ஆகும். தகுந்த சீராக்கங்களை செய்வதன் மூலம் இது திருத்தப்படும். | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் துல்லியமாக அடையாளம் காணப்பட்டு கணக்கீட்டு மதிப்பீடுகளில் சரி செய்யப்பட வேண்டும், எனினும் அவ்வாறு செயற்படடாததால் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்ட ரூபா 116,014,265 கிரயமான உள்கட்டமைப்பின் பயன்பாடு ஆயுட்காலம் மறுபரிசீலனை செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துகளின் கொண்டு செல்லும் பெறுமதியை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் நியாயமான பெறுமதிக்கு கொண்டு வர எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட ஆனால் இன்னும் பயன்பாட்டில் உள்ள சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அரச நிறுவனங்களில் பெற்ற மூலதனப் பங்களிப்பு ரூபா 148,653,535 என நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டிருந்தாலும், அந்த நிறுவனம் நிதிக்கூற்றுக்களில் அதற்கான அட்டவணையைச் சேர்க்கவில்லை. மேலும், அந்த பங்களிப்பிலிருந்து வாங்கப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பயன்பாட்டின் அடிப்படையில் பொறுப்பின் மதிப்பைக் குறைப்பதற்கும் அந்த மதிப்பை ஒரு பொறுப்பாக அடையாளம் காண்பதற்கும் நிறுவனம் ஒரு கொள்கையை இனங்கண்டிருக்கவில்லை. | புறக்கணிப்பு காரணமாக இது இடம்பெற்றுள்ளது. அடுத்த ஆண்டு முதல், இதை சரியான கணக்கீட்டுக்கு இணங்க பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான அட்டவணைகள் சரியாக பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் தேவையான கணக்கீட்டு கொள்கைகளை இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டு வரும் மூலதனப் பணிகளின் மதிப்பு ரூபா 5,452,216 ஆகும். நிதி நிலைமைக்கூற்றில் தனித்தனியாக முன்வைக்காமல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்புடன் சேர்க்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பு அந்தத் தொகையை விட அதிகமாக இருந்தது. | நடைமுறை மூலதனப் பணிகளின் பெறுமதி, ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியுடன் கூட்டிக் காண்பிக்கலாம் என்பதால் நிதிக்கூற்றுக்களில் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மேலதிக தெளிவுபடுத்தலுக்காக, அடுத்த ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் இவற்றை தனித்தனியாக முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறை வேலை மற்றும் மூலதனப் பணிகள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாக அடையாளம் காணப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி பெறுபேறுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 42,242,355 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,269,474 தொகை ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 36,972,881 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக கடந்த வருடத்திற்கு ஒப்பாக ஏனைய வருமானங்கள் குறைவடைந்தமை மற்றும் நிர்வாக செலவினங்கள் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டங்களுக்கான நேரத்தை தீர்மானிப்பதில் அதை பாதிக்கும் நடைமுறை சிக்கல் சூழ்நிலைகளான தொழில்நுட்ப சிக்கல்கள் மற்றும் கடல்நீரைப் பெறுவது போன்ற சிக்கல்களைப் ஆராயாது செயற்திட்ட காலம் நிர்ணயிக்கப்பட்ட காரணத்தால் 2020 இல் முடிக்க திட்டமிடப்பட்ட 04 திட்டங்களுக்கான ஒப்பந்த காலம் 01 இல் இருந்து 5 ஆண்டுகளாக நீட்டிக்க நேர்ந்திருந்தது. | ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் போது ஆராய்ச்சித் திட்டத்தின் தன்மையில் அதிக எண்ணிக்கையிலான சோதனை நடவடிக்கைகள் இருப்பதால், ஆராய்ச்சித் திட்டங்களின் சரியான நேரத்தைத் தீர்மானிப்பது பெரும்பாலும் கடினமாக உள்ளது. தீர்மானிக்கப்படும் காலம் மாற்றத்திற்கு உட்பட்டது. எவ்வாறாயினும், குறித்த காலக்கெடுவிற்குள் ஆய்வுகளை முடிக்க தேவையான நடவடிக்கைகளை | நடைமுறை தாக்க நிலைமைகளை கருத்திற் கொண்டு திட்டத்தின் காலம் தீர்மானிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்குமாறும், எதிர்கால திட்டங்களை உரிய காலக்கெடுவிற்குள் முடிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறும் பணிப்பாளர் சபை அறிவுறுத்தியுள்ளதுடன், எதிர்காலத்தில் செயற்திட்டங்களை உரிய காலத்தில் மேற்கொள்ள உச்ச முயற்சி எடுக்கப்படும். | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,731,860 கிரயத்தில் பூர்த்தி செய்யப்பட்ட 04 புதிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகள் பெற்றுக்கொள்ள, உரிமங்கள் வழங்குவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இத்தொழில்நுட்பங்கள் இன்று சமூகத்திற்கு மிகவும் முக்கியமானதாகவும் இன்றியமையாததாகவும் காணப்படுவதுடன் அவை மிக விரைவில் சமூகமயப்படுத்தப்பட வேண்டிய தொழில்நுட்பங்களாகவும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு தொழில்நுட்பத்திற்கும் காப்புரிமை பெறுவது சாத்தியமில்லை என்பதுடன், காப்புரிமை பெறக்கூடிய தொழில்நுட்பங்களுக்கு அவற்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும். முடிக்கப்பட்ட தொழில்நுட்பங்களுக்கான தொழில்நுட்ப பணிகள் எதிர்காலத்தில் செய்யப்படும். | காப்புரிமை பெறவும், புதிய கண்டுபிடிப்புகளை விரைவில் சமூகமயமாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிலையத்தினால் அடையாளம் காணப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை சமூகமயமாக்கும் நோக்கத்திற்காக இந்த தொழில்முனைவோருக்கு உரிமங்களை வழங்கப்படுவதுடன், மேலும் தொழில்முனைவோர் அந்த தொழில்நுட்பங்களைப் பின்தொடரவில்லை அல்லது அவற்றை மேம்படுத்த ஆலோசனை வழங்கவில்லை என்ற அடிப்படையில் உரிமம் புதுப்பித்தலுக்கு குறைவாக பதிலளிக்கின்றனர் என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 102 அனுமதி பத்திரம் பெறுநர்கள் இருந்த | பரிசீலனையில் உள்ள காலகட்டத்தில் தொழில்நுட்ப உரிமங்களைப் புதுப்பிப்பதற்கான உரிமம் பெற்றவர்களிடமிருந்து பதில்கள் குறைவாகவே காணப்பட்டன. மேலும், காலத்தின் தேவையின் காரணமாக சில தொழில்நுட்பங்கள் தொழில்நுட்ப வல்லுநர்களால் கையகப்படுத்தப்பட்டன, ஆனால் அந்த தொழில்நுட்பங்களை பின்னர் முன்னோக்கி கொண்டு செல்ல எந்த உறுதியும் எடுக்கப்படவில்லை. மேலும், தொற்றுநோய்க்கு முகங்கொடுத்து, தொழில்நுட்பம் பெறுபவர்களின் | தொழில்முனைவோருக்கு உரிமம் வழங்கிய பிறகு, உரிமம் பெற்றவர்கள் தேவையான பின்தொடர்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் உரிமங்களை புதுப்பிக்கும் நிலைக்கு உரிமம் பெறுநர்களை உள்ளாக்க வேண்டும். |

போதிலும், 63 பேர் மட்டுமே தங்கள் உரிமங்களை புதுப்பித்துள்ளனர்.

பொருளாதார தாக்கம் உரிமங்களை புதுப்பிப்பதில் தாமதத்திற்கு வழிவகுத்தது மற்றும் அவற்றை புதுப்பிக்காமல் இருந்தமைக்கு காரணமாக அமைந்தது. உரிமம் பெற்றவர்களைப் பின்தொடரவும், அவர்களுக்குத் தேவையான அறிவுரைகள் அவ்வப்போது வழங்கப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.